


**23. 12. 2025**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் இறையான்மையிலும், தேச மக்களின் பாதுகாப்பிலும் புலனாய்வு துறை இன்றியமையா பங்காற்றுவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பெருமிதம் தொிவித்துள்ளாா்.

2. வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலை வாய்ப்பு உறுதி வாழ்வாதார திட்டத்திற்கு ஒன்றரை லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்று மத்திய வோளண் அமைச்சர் திரு. சிவ்ராஜ்சிங் சவ்ஹான் கூறியுள்ளாா்.

3. தமிழக மீனவர்களின் தொடர் கைது பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வலியுறுத்தி, முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளாா்.

4. பள்ளி விடுமுறை நாட்களில் சிறப்பு வகுப்புகளை நடத்த கூடாது என்று பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி உத்தரவிட்டுள்ளாா்.

5. இந்திய - இலங்கை மகளிா் அணிகளுக்கு இடையேயான 2-வது 20-20 கிாிக்கெட் போட்டி விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெறுகிறது.

***************

குடியரசு தலைவர் – புலனாய்வு முகமை

நாட்டு மக்களின் பாதுகாப்பிலும், தேச ஒற்றுமை மற்றும் இறையான்மையிலும் புலனாய்வு துறை இன்றியமையா பணியாற்றி வருவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பெருமிதம் தொிவித்துள்ளாா்.

புதுதில்லியில் புலனாய்வு முகமை நூற்றாண்டு நிகழ்வில் இன்று உரையாற்றிய அவர், கடந்த 10 ஆண்டுகளில் உள்நாட்டு அச்சுறுத்தல்கள் திறம்பட கையாளப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

தேச பாதுகாப்பின் மறைமுக வீரர்களாக புலனாய்வு முகமையினர் திகழ்கின்றனர் என்றும் அவர் புகழாரம் சூட்டினார்.

உள்நாட்டு பாதுகாப்பின் வலிமைமிகு அரணாக திகழ்வதுடன், பாதுகாப்பு சவால்களையும், அச்சுறுத்தல்களையும் துல்லியமாக கண்டறிந்து நுட்பமாக செயலாற்றுவதாக புலனாய்வு முகமையின் இயக்குனர் திரு. தபன்குமார் கூறியுள்ளார்

***************

சி.பி. ராதா கிருஷ்ணன்

செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி வளர்ச்சியுடன் கூடிய பெரும் மாற்றங்களை முன்னெடுத்து செல்லும் முதன்மை நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று குடியரசு துணை தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செயற்கை நுண்ணறிவு தேசிய மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் செயற்கை நுண்ணறிவு பாட திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தினார்.

இதன்மூலம் இளம் வயதிலேயே மாணாக்கர் நெருக்கடி நேரங்களில் செயலாற்றும் திறனையும், பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் நுட்பத்தையும் பெறமுடியும் என்றார்.

வளர்ச்சி அடைந்த பாரதம், சுய சார்பு பாதையில் செயற்கை நுண்ணறிவின் அவசியத்தை திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் எடுத்துரைத்தார்.

***************

இஸ்ரோ

ஸ்ரீஹரிகோட்டா சத்தீஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து LVM 3 - M 6 ராக்கெட் அமெரிக்காவின் AST Space Mobile Blue Bird Block – 2 செயற்கைகோளுடன் நாளை-காலை 8.54- மணிக்கு விண்ணில் செலுத்தப்படுகிறது.

இந்த செயற்கைகோளை புவியின் தாழ்வான சுற்றுப் பாதையில் LVM 3 நிலை நிறுத்த உள்ளது.

வர்த்தக நோக்கிலான இந்த ராக்கெட்டின் இயக்கம் மூலம், விண்ணில் செலுத்தப்படும் மிக பிரம்மாண்டமான வர்த்தக தொலைதொடர்பு செயற்கை கோளாகும் இது.

அடுத்த தலைமுறைக்கான அகண்ட அலைவா◌ிசை சேவையையும், சிறப்பு வன்பொருட்கள் எதுவும் இன்றி ஸ்மா◌ா◌ட் ஃபோன் செயல்பாட்டை முன்னெடுத்து செல்வதை நோக்கமாக கொண்டு இச்செயற்கை கோள் விண்ணில் ஏவப்படுகிறது.

விண்வெளியிலிருந்தே 4-ஜி 5-ஜி தொலை தொடர்பு இணைப்புகள், தொலைபேசி அழைப்புகள் வலைதளம் மற்றும் வீடியோ சேவைகளை வழங்கும் வகையில் இந்த செயற்கைகோள் வடிவமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீஹா◌ி கோட்டாவிலிருந்து இந்த செயற்கை கோள் ஏவப்படவுள்ளதால் பழவேற்காடு மீனவர்கள் நாளை கடலுக்கு செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது.

***************

## தேசிய விவசாயிகள் தினம்

தேசிய விவசாயிகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக சீா◌ிய பங்காற்றிய முன்னாள் பிரதமர் சவுத்ரி சரண் சிங்கின் பிறந்த தினம் விவசாயிகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

பிரதமர் திரு. நரேந்திரமோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தேச கட்டமைப்பிலும், விவசாயிகளின் நல, வளத்திற்காகவும், விளிம்பு நிலை மக்களுக்காகவும் செயலாற்றிய சவுத்ரி சரண் சிங்கை நாடு என்றென்றும் நினைவு கூறும் என்று குறிப்பிட்டுள்ளா◌ா◌.

மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தமது செய்தியில் சுய சா◌ா◌பு இந்தியாவை முன்னெடுத்து செல்ல சரண் சிங்கின் கொள்கைகள் பெரிதும் பங்காற்றும் என்று கூறியுள்ளா◌ா◌.

மத்திய உணவு நுகர்வோ◌ா◌ விவகாரங்களுக்கான அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி வெளியிட்டுள்ள செய்தியில் நாட்டிற்கு அன்னமிடும் விவசாயிகளின் அயராத கடின உழைப்பும், அர்ப்பணிப்பு மிகு சேவையும் தேசத்தை வலுப்படுத்தியுள்ளதாக எடுத்துரைத்தா◌ா◌.

வேளாண் பெருங்குடி மக்களுக்கு வாழ்த்துக்களை ஊாித்தாக்கியுள்ள தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உழவர்களுக்கான வேளாண் வளர்ச்சி திட்டங்களால் மாநிலம் உற்பத்தியில் தொடர்ந்து சாதனை புாிந்து வருவதாக கூறினாா்.

இதனிடையே மண்ணுயிா் காப்போம் திட்டத்தின் கீழ் ராணிப்பேட்டை மாவட்டத்தில் நொச்சி, வேப்பங்கன்றுகள் 100 சதவீத மானியத்தில் வழங்கப்படுவதாக திமிரி வேளாண் உதவி இயக்குனர் திரு.ராமன் தெரிவித்துள்ளாா்.

***************

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலை வாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்திற்காக ஒரு லட்சத்து 51 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக மத்திய வோளண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தொிவித்துள்ளாா்.

100 நாட்களுக்கு மாறாக 125 நாட்களுக்கு வகை செய்யப்பட்டுள்ள இந்த திட்டம் வேண்டுமென்றே தவறாக சித்தாிக்கப்படுவதாக அவர் குறை கூறினாா்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மேம்பட்ட திட்டமாக இது முன்னெடுத்து செல்லப்படுவதாக அவர் கூறினாா்.

நீர் பாதுகாப்பு, ஊரக கட்டமைப்பு பணிகள் வாழ்வாதாரம் சாா்ந்த நடவடிக்கைகள், போிடர் தடுப்பு செயல்பாடுகள், உள்ளூர் மக்களின் பங்களிப்பு போன்றவற்றை நோக்கமாக கொண்டு இந்த திட்டம் முன்னெடுத்துச்செல்லப்படுகிறது.

***************

முதலமைச்சர் கடிதம்

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறை பிடித்து செல்லும் நீண்டகால பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளாா்.

மத்திய அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் எழுதிய கடிதத்தில், 12 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் இன்று சிறைபிடித்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளாா்.

மீனவர்களின் தொடர் கைது நடவடிக்கையால் அவர்களது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளாா்.

எனவே இப்பிரச்சனைக்கு இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வை எட்டும் வகையிலான பேச்சுவார்த்தைகளை விரைவில் கூட்ட தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்தை சேர்ந்த 248 மீன்பிடி படகுகளும், 62 மீனவர்களும் இலங்கை வசம் உள்ளதாக கூறியுள்ள முதலமைச்சர் மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் விரைவில் விடுவித்திட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

***************

உதயநிதி

தமிழ்நாடு 11.19 சதவிகித பொருளாதார வளர்ச்சியோடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை ஆர்.கே. நகரில், கிறிஸ்துமஸ் விழா நிகழ்வில் இன்று உரையாற்றிய அவர், தமிழக அரசு சிறுபான்மையின மக்களுக்ககாக கல்வி ஊக்கத்தொகை, ஜெருசலேம் புனித பயண மானியம், தேவாலய புதுப்பித்தல் நிதி உள்ளிட்டவற்றை செயல்படுத்தி வருவதாக எடுத்துரைத்தார்.

வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டவர்கள் அடுத்த மாதம் 18ஆம் தேதிக்குள் விண்ணப்பித்து பயன்பெறுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் 2 ஆயிரத்து 200 பேருக்கு நல திட்ட உதவிகளையும் அவர் வழங்கினார்.

***************

அன்பில் மகேஷ்

தமிழ்நாட்டில் பள்ளி விடுமுறை நாட்களில் சிறப்பு வகுப்புகளை ஆசிரியர்கள் நடத்தக்கூடாது என்று மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவுறுத்தியுள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தனியார் பள்ளிகள் இதனை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

***************

பியூஷ்கோயல்

தமிழ்நாட்டில் வரவிருக்கும் சட்டப்பேரவை தேர்தலில் பி.ஜே.பி.-யின் நிலைப்பாடுகள் குறித்து தமிழக பிஜேபி தேர்தல் பொறுப்பாளரும், மத்திய

அமைச்சருமான திரு. பியூஷ்கோயல் சென்னையில் இன்று விாிவான ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளாா்.

மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்ட பிஜேபி நிா்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

***************

கக்கன்

விடுதலை போராட்ட தியாகி கக்கனின் நினைவுதினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மதுரை மாவட்டம் மேலூர் தும்பைப்பட்டியில் அன்னாரது மணிமண்டபத்தில் உள்ள திருவுருவ சிலைக்கு மாநில அமைச்சர் திரு.மூர்த்தி, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரவீன் குமாா் உள்ளிட்டோா் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

***************

தண்ணீர் திறப்பு

திண்டுக்கல் மாவட்டம் பழனிவட்டம் பாலாறு பொருந்தலாறு அணையிலிருந்து பழைய அணைக்கட்டு கால்வாய்கள் மூலம் முதல்போக பாசனத்திற்கு நாளை முதல் தண்ணீர் திறக்கப்படுகிறது.

வரும் மாா்ச் 3ஆம் தேதிவரை திறக்கப்பட உள்ள இந்த நீாின் மூலம் பொியம்மாபட்டி, தாமரைக்குளம், மானூர், கோாிக்கடவு உள்ளிட்ட கிராமங்களின் ஆறாயிரத்து 168 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

***************

இருவாி

முல்லை பொியாறு அணையில் ஆளில்லா தானியங்கி இயந்திரம் மூலம் நீருக்கடியில் ஆய்வுகள் இன்று நடைபெற்று வருகின்றன.

மண் மற்றும் பொருள் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் இப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில் ஊட்டசத்து வேளாண் இயக்க திட்டத்தின்கீழ், 100 சதவீத மானியத்துடன் 76 ஆயிரத்து 200 காய்கறி தொகுப்புகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக, ஆட்சித்தலைவர் திருமதி.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் கீழ் கடன்பெற விரும்பும் கைவினை

கலைஞர்கள் மாவட்ட நல அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி. துர்காமூர்த்தி கூறியுள்ளாா்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் தமிழக அரசின் அன்புக்கரங்கள் திட்டத்திற்கு தகுதியுடையவர்கள் விண்ணப்பித்து பயனடையுமாறு ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் கூறியுள்ளாா்.

பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

அதேபோல் அாியலூர் மாவட்டத்தில் எாிவாயு நுகர்வோா் குறைதீர் கூட்டம் செந்துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும்.

ராணிப்பேட்டை மாவட்டம் பெருமூச்சி பகுதியில், குடிமைப்பொருள் வழங்கல் புலனாய்வு காவல்துறையினர் மேற்கொண்ட சோதனையில், ஒரு வீட்டின் பின்புறம் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 2 டன் ரேஷன் அரிசி மூட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ஈரோடு மாவட்டம் தாளவாடி மலைப்பகுதி கிராமங்களில் முகாமிட்டுள்ள 7 காட்டு யானைகளை வனப்பகுதிக்குள் விரட்டும் பணிகளை வனத்துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

***************

பொருநை அருங்காட்சியகம்

திருநெல்வேலி பொருநை அருங்காட்சியகத்தை பொதுமக்கள் இன்றுமுதல் பாா்வையிட்டு வருகின்றனர்.

ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை பகுதிகளில் அகழாய்வில் கண்டெக்கப்பட்ட பொருட்கள் இதில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக பாா்வையாளர் தொிவிக்கிறாா்.

***************

ஆர்பாட்டம்

நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மழையால் பாதிக்கப்பட்ட பயிா்களுக்கு நிவாரணம் வழங்க கோாியும், சென்ற ஆண்டுக்கான பயிா் காப்பீட்டு தொகையை வழங்க கோாியும் அவர்கள் ஆர்பாட்டம் மேற்கொண்டனர்.

***************

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தென் தமிழக கடலோரம் டெல்டா மாவட்டங்களில், அடுத்த 7 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தொிவித்துள்ளது.

நீலகிாி மாவட்டத்தில் இன்றும் நாளையும் உறைபனி நிலவக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

***************

கிாிக்கெட்

இந்திய - இலங்கை மகளிா் அணிகளுக்கு இடையேயான 2-வது 20-20 கிாிக்கெட் போட்டி விசாகப்பட்டினத்தில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடாில் இந்தியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

***************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது